<u>சுருக்கம்</u>

பொதுப்பணித்துறை – கட்டடம் – 2009–2010 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் 2 அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை கட்டுதல் – ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் நிலை நிதிக்குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது – நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பொதுப்பணி (ஒய்2)த்துறை</u>

அரசாணை (நிலை) எண்.161

நாள் : 7.8.2009
ஆடி – 22
திருவள்ளுவர் ஆண்டு 2040

படிக்க :

1 தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை 5 கடித எண். உசெபொ/தொ.நு.12/52640/2007, நாள் 19.1.2009.
2 அரசு கடித எண். 75349/நிதி (வசெ II)த்துறை /2009, நாள் 21.5.2009.
3 தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை–5 கடித எண்.உசெபொ/டி12/22358/2009, நாள் 24.6.2009.

---

<u>ஆணை:</u>

தலைமைப் பொறியாளர் (கட்டடம்), அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் 2 அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை கட்டும் பணி ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் தற்போது, சுற்றுலா மாளிகையோ, ஆய்வு மாளிகையோ இல்லை என்றும், இப்பகுதியில் உள்ள ஏரிகள் மற்றும் வாய்க்கால்களை ஆய்வு செய்வதாக மிக முக்கிய பிரமுகர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அடிக்கடி வருகை புரிவதாகவும், எனவே, இப்பகுதிக்கு வருகை தரும் மிக முக்கிய பிரமுகர்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் தங்கும் இடவசதி அளிக்கும் பொருட்டு, 2 அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை கட்டும் இப்பணிக்கான கருத்துரு பகுதி–II திட்டம் 2009–2010ன் கீழ் சமர்ப்பிக்கப்படுகிறது என்றும், இக்கட்டடம் தரைதளத்தில் 120.95 சதுர மீட்டர் பரப்பளவில் அமையவுள்ளது என்றும், இக்கட்டடப் பணிக்கான நிலம் உள்ளது என்றும், இம்மதிப்பீட்டுத் தொகை ரூ.23.00 இலட்சம் ஆகும் என்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட திட்டத்தினை 2009–2010–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் 2 அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009-2010ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"4059 - பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு – 01 – அலுவலகக் கட்டடங்கள் – 051 கட்டுமானம் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநில திட்டம் JJ பொதுப்பணிகள் – 16 பெரும் பணிகள். (து.தொ.கு. 4059 – 01 – 051 – JJ – 1605)"

5. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்களால் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு அனுப்பப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. மதிப்பீட்டின் ஒரு பிரதி தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களுக்கு திருப்பி அனுப்பப்படுகிறது.

6. தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்கள் மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.குறிப்பு எண்.36104/பொ.ப.I/2009, நாள் 30.6.2009ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை– 5.
கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்–1, மதுரை.
செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை,
கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், இராமநாதபுரம்.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
மாநில கணக்காயர் (கிழக்கு), சென்னை–18/35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
நகல்:
நிதித்(பொ.ப.I)துறை, சென்னை–9.
பொதுப்பணித்(சி.பா.1) துறை, சென்னை–9.
இ.கோ /உதிரி

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்